### இந்தியாவிலேயே தினமும் மக்களைச் சந்திக்கக்கூடிய ஒரே தலைவர்:

# கழகப் பணிகளில் எப்படி உழைக்க வேண்டும் என்பதற்கு நமக்கெல்லாம் ஒரே ரோல் மாடல் நம் கழகத் தலைவர்தான்!

## ஈரோட்டில் நடைபெற்ற 'களத்தில் இளைஞர் அணி' கூட்டத்தில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

ஈரோடு,மார்ச். 25 –

**ஈரோட்டில் நடைபெற்ற, ஈரோடு மற்றும் நாமக்கல் மாவட்டங்களைச் சேர்ந்த மாவட்ட – மாநகர – ஒன்றிய – நகர – பகுதி – பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்களுடன் 'களத்தில் இளைஞர் அணி' தேர்தல் பிரச்சாரம் குறித்த ஆலோசனைக் கூட்டத்தில் கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு உரையாற்றினார்.**

**அப்போது அவர், ``தேர்தல் பணி, இளைஞர் அணி பணி, மக்கள் பணி, கழகப் பணிகளில் எப்படி நாம் உழைக்க வேண்டும் என்று நாம் யாரையும் உதாரணத்துக்குத் தேட வேண்டிய அவசியம் இல்லை. நமக்கெல்லாம் ஒரே ரோல் மாடல் நம் கழகத் தலைவர் அவர்கள் தான். இன்றைக்கும் இந்தியாவிலேயே ஒரு முதலமைச்சர் தினமும் மக்களைச் சந்திக்கக் கூடியவர் என்றால், அது நம் கழகத் தலைவர் அவர்கள்தான். அவர்தான் நம் இளைஞர் அணிக்கே ரோல் மாடல்" என்று குறிப்பிட்டார்.**

**கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரையின் விவரம் வருமாறு:**

மாவட்டக் கழகத்தின் அனுமதியுடன் இன்று ஈரோடு மற்றும் நாமக்கல் மாவட்ட இளைஞர் அணியின் ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் நிகழ்ச்சியை இங்கு நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம்.

#### பல்வேறு சிறப்புகள்

இந்த ஈரோட்டு மண்ணுக்கு, பல்வேறு சிறப்புகள் உண்டு. தமிழ்நாட்டுக்குத் தந்தை பெரியார் அவர்களைத் தந்த மண் இந்த ஈரோட்டு மண். அதுமட்டுமல்ல, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், தந்தை பெரியாரின் ஈரோட்டு குருகுலத்தில் தங்கித் தான் தன் கொள்கைப் பாடங்களைக் கற்றுக் கொண்டார். அப்படிப்பட்ட சிறப்புவாய்ந்த இந்த ஈரோட்டுக்கு வருகை தந்து உங்களையெல்லாம் சந்திப்பதில் நான் உண்மையில் மிகுந்த மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன்.

சரியாக ஒரு மாதத்துக்கு முன்பு கோயம்புத்தூரில் மேற்கு மண்டல இளைஞர் அணி நிர்வாகிகள் சந்திப்பை ஒரு மாநாடு போல நாம் நடத்திக் காட்டினோம். அந்த நிர்வாகிகள் சந்திப்பின் வெற்றிக்கு இங்கு வந்துள்ள நீங்கள் அனைவரும் உழைத்தீர்கள். நீங்கள் அனைவரும் கோயம்புத்தூர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டீர்கள். அதற்கு இந்த நேரத்தில் உங்களின் உழைப்புக்கும், அந்த நிகழ்ச்சியை வெற்றிகரமாக நடத்திக்காட்டிய உங்கள் அனைவருக்கும் மீண்டும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்று மீண்டும் நாம் அனைவரும் இங்கு சந்திக்கின்ற வாய்ப்புக் கிடைத்துள்ளது.

மிக மிக முக்கியமான ஒரு காலகட்டத்தில், தருணத்தில் நாம் சந்திக்கிறோம். சட்டமன்றத் தேர்தல் தேதி அறிவித்த பிறகு, நாம் சந்திக்கிறோம். தேர்தல் தேதி அறிவித்துவிட்டார்கள். ஏப்ரல் 23–ஆம் தேதி தேர்தல். இன்னும் சொல்லப்போனால், சரியாக ஒரு மாத காலம் இருக்கிறது. இந்த ஒரு மாத காலத்தில் என்னென்ன பணிகளை நாம் செய்ய வேண்டும் என்பதற்காக நாம் கலந்து ஆலோசிப்பதற்காகத்தான் இன்று இந்தக் கூட்டம் நடத்தப்பட்டுள்ளது. அதற்காகத்தான் `களத்தில் இளைஞர் அணி' என்கிற முன்னெடுப்பை நாம் தொடங்க இருக்கிறோம்.

#### களத்தில் இளைஞர் அணி

கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது `களத்தில் இளைஞர் அணி' என்று ஒரு முன்னெடுப்பைத் தொடங்கி நீங்கள் அனைவரும் களத்தில் உங்களின் பிரசாரத்தில் ஈடுபட்டீர்கள். வாக்காளர்களைச் சந்தித்தீர்கள். உங்களின் பிரசாரத்தின் காரணமாக நாம் 100 சதவிகித வெற்றியை நாடாளுமன்றத் தேர்தலில் பெற்றோம். வரவிருக்கும் சட்டமன்றத் தேர்தலிலும் அதே 100 சதவிகித வெற்றியை நாம் நிச்சயம் பெற வேண்டும் என்று உங்களையெல்லாம் கேட்டுக்கொள்வதற்காக இங்கு வருகை தந்துள்ளேன்.

காலையில் கோயம்புத்தூர், நீலகிரி மாவட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் எல்லோரையும் சந்தித்துவிட்டு, இங்கு வந்துள்ளேன். காலையில் நிர்வாகிகளைச் சந்திக்கும்போது மிகுந்த எழுச்சியாக இருந்தது. அவர்களின் வரவேற்பு மற்றும் உற்சாகமான எழுச்சியையெல்லாம் பார்க்கும்போது நிச்சயம் நம்பிக்கை இருந்தது. ஆனால், இப்போது ஈரோடு, நாமக்கல் நிர்வாகிகளாகிய உங்களையெல்லாம் சந்திக்கும்போது அந்த மகிழ்ச்சி அப்படியே இரட்டிப்பாகிறது. உங்களின் உற்சாகத்தைப் பார்க்கும்போது வெற்றி 90 சதவிகிதம் உறுதி செய்யப்பட்டுவிட்டது. ஆனால், மீதமுள்ள 10 சதவிகித வெற்றியை நாம் உறுதி செய்ய வேண்டும். அதை விட்டுவிடக் கூடாது. அதை நிச்சயம் செய்வீர்கள் என்கிற அந்த நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

#### நாம் உழைக்க வேண்டும்

தேர்தல் பணி, இளைஞர் அணி பணி, மக்கள் பணி, கழகப் பணிகளில் எப்படி நாம் உழைக்க வேண்டும் என்று நாம் யாரையும் உதாரணத்துக்குத் தேட வேண்டிய அவசியம் இல்லை. நமக்கெல்லாம் ஒரே ரோல் மாடல் நம் கழகத் தலைவர் அவர்கள்தான். இன்றைக்கும் இந்தியாவிலேயே ஒரு முதலமைச்சர் தினமும் மக்களைச் சந்திக்கக்கூடியவர் என்றால், அது நம் கழகத் தலைவர் அவர்கள்தான். அவர்தான் நம் இளைஞர் அணிக்கே ரோல் மாடல். எனவே, வந்துள்ள இளைஞர் அணி நிர்வாகிகள் உங்களின் உழைப்பை நான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன், நம்புகிறேன். உங்களின் அர்ப்பணிப்பை நான் மதிக்கிறேன், தலை வணங்குகிறேன். நாடாளுமன்றத் தேர்தல் வெற்றியைவிட மிகப்பெரிய ஒரு வெற்றியை நாம் இந்தச் சட்டமன்றத் தேர்தலில் பெற்றாக வேண்டும். அதை நீங்கள் உறுதி செய்வீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. சாதாரண வெற்றியாக இருக்கக் கூடாது, மிகப் பெரிய வெற்றியாக இருக்க வேண்டும், வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியாக இந்தச் சட்டமன்றத் தேர்தல் வெற்றி இருக்க வேண்டும்.



#### இளைஞர் அணிப் படை

ஒரு நாட்டைப் பாதுகாக்கின்ற ஒரு ராணுவ வீரனுக்கு எவ்வளவு பெருமை இருக்குமோ அதேபோல, தமிழ்நாட்டைக் காக்கக்கூடிய ராணுவ வீரர்களாக நம் இளைஞர் அணிப் படை இன்றைக்கும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. கழகத்தின் ராணுவப் படை நீங்கள். இந்தக் கருப்பு சிவப்பு இளைஞர் அணிப் படை இருக்கும் வரை, தமிழ்நாட்டுக்குள் எந்தக் கொம்பனும் கால் எடுத்து வைக்க முடியாது. எந்தப் பாசிச சக்தியும் தமிழ்நாட்டுக்குள் நுழையமுடியாது. இவ்வளவு பெரிய ஓர் இளைஞர் படையை, தேர்தல் என்கிற ஒரு ஜனநாயகப் போரில் நாம் ஈடுபடுத்தப்போகிறோம். அதற்கு நாமெல்லாம் தயாராகின்ற ஒரு பாசறைக் கூட்டம்தான் இன்று இங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

எந்தத் தைரியத்தில் மக்களைச் சந்திக்கப் போகிறோம்? ஐந்து ஆண்டுகள் ஆட்சிப் பொறுப்பேற்று எத்தனையோ திட்டங்களை நம் அரசு செய்துகொடுத்துள்ளது, நம் முதலமைச்சர் செய்துகொடுத்துள்ளார் என்கிற அந்தத் தைரியத்தில் மக்களைச் சந்திக்கப்போகிறோம். சில திட்டங்களை மட்டும் உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

#### விடியல் பயணத் திட்டம்

ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் தலைவர் அவர்கள் இட்ட முதல் கையெழுத்து 'மகளிர் விடியல் பயணத் திட்டம்.' இன்று 920 கோடி பயணங்களை மகளிர் மேற்கொண்டுள்ளனர். அரசுப் பள்ளிகளில் 'முதலமைச்சர் காலை உணவுத் திட்டம்', ஒவ்வொரு நாளும் 20 லட்சம் குழந்தைகள் அந்தத் திட்டத்தில் பயன் பெற்றுவருகிறார்கள். 'அன்புக்கரங்கள்' என்று ஒரு திட்டம், இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லை, பெற்றோர்களை இழந்த குழந்தைகள் படிப்புச் செலவிற்கு மாதம் 2,000 ரூபாய் தர வேண்டும் என்று நம் அரசு கொடுத்துக் கொண்டிருக்கிறது. 'புதுமைப் பெண் திட்டம்', 'தமிழ்ப்புதல்வன் திட்டம்'. அரசுப் பள்ளியில் படித்து எந்தக் கல்லூரிக்குச் சென்றாலும் கல்வி ஊக்கத்தொகை மாதம் 1,000 ரூபாய் நம் அரசு வழங்குகிறது. 10 லட்சம் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு இலவச மடிக்கணினி திட்டத்தையும் அறிவித்து, ஒரே மாதத்தில் முதலமைச்சர் வழங்கியுள்ளார்.

தமிழ்நாட்டு வரலாற்றிலேயே முதல் முறையாக 3 சதவிகித விளையாட்டு இடஒதுக்கீட்டில் 300 விளையாட்டு வீரர்களுக்கு அரசு வேலைவாய்ப்பை நம் அரசு வழங்கியுள்ளது. `கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்.' ஒரு கோடியே 32 லட்சம் மகளிருக்கு கடந்த மூன்று ஆண்டுகளாக மாதம் 1,000 ரூபாய் நம் தலைவர் வழங்கியுள்ளார். மீண்டும் ஆட்சி



**ஒரே ரோல் மாடல்!**

**தேர்தல் பணி, இளைஞர் அணி பணி, மக்கள் பணி, கழகப் பணிகளில் எப்படி நாம் உழைக்க வேண்டும் என்று நாம் யாரையும் உதாரணத்துக்குத் தேட வேண்டிய அவசியம் இல்லை. நமக்கெல்லாம் ஒரே ரோல் மாடல் நம் கழகத் தலைவர் அவர்கள்தான்.**

அமைந்தவுடன் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை 1,000 ரூபாயிலிருந்து 2,000 ரூபாயாக உயர்த்தி வழங்குவேன் என்கிற வாக்குறுதியையும் வழங்கியுள்ளார். `தாயுமானவர் திட்டம்', வயதானவர்கள், முதியவர்கள், மாற்றுத் திறனாளிகள் வெயிலில் வந்து நியாயவிலைக் கடையில் வரிசையில் நிற்கத் தேவையில்லை. அவர்களின் வீடு தேடிப் பொருள்கள் வீட்டுக்கே வரும். 28 லட்சம் மாற்றுத்திறனாளிகள் மற்றும் மூத்த குடிமக்கள் இந்தத் திட்டத்தில் பயன்பெறுகிறார்கள்.

#### அனைவருக்குமான அரசாங்கம்

இப்படி குழந்தைகளிலிருந்து முதியவர்கள் வரை அனைத்து வயதினருக்குமான ஓர் அரசாங்கமாக நம் அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளது. ஈரோடு மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் மட்டும் எத்தனையோ திட்டங்கள் செயல்படுத்தப்படுள்ளன. ஈரோடு மாவட்டத்தில் 65 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம் கட்டப்பட்டுள்ளது. சித்தோடு – ஈரோடு இடையே நான்கு வழிச் சாலை. மொடக்குறிச்சியில் 362 கோடி ரூபாய், சென்னிமலையில் 440 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேட்டுப்பாளையம், கோபிசெட்டிபாளையம், சத்தியமங்கலம், ஈரோடு சாலையை நான்கு வழிச்சாலையாக மேம்படுத்தியுள்ளோம். 86 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பவானி நகருக்குப் புறவழிச்சாலை அமைக்கின்ற பணி.

10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஈரோட்டில் பணிபுரிகின்ற பெண்களுக்குத் தோழி விடுதி. மொடக்குறிச்சியில் சிறு விளையாட்டு அரங்கம். 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு சமூக நீதிக் கல்லூரி மாணவர் விடுதி.

#### நாமக்கல் திட்டங்கள்

நாமக்கல் மாவட்டத்தில் 1,100 கிராமப்புறக் குடியிருப்புகளில் 800 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம். நாமக்கல்லுக்கும் புதிய பேருந்து நிலையம். 425 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மல்லியக்கரை, ராசிபுரம், திருச்செங்கோடு, ஈரோடு சாலை நான்கு வழிச் சாலையாக உயர்த்தப்பட்டுள்ளது. 350 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மோகனூர், நாமக்கல், சேந்தமங்கலம், ராசிபுரம் இடையே இருவழிச் சாலை அமைக்கப்பட்டுள்ளது.

நாடு விடுதலை பெற்ற பிறகு, முதல் முறையாக, போதமலை மலைக் கிராமங்களுக்கு 140 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சாலை வசதி உருவாக்கப்பட்டுள்ளது. 55 கோடி ரூபாய் மதிப்பீட்டில், ராசிபுரத்தில் அரசு மருத்துவமனை கட்டப்பட்டுள்ளது. இப்படி நாமக்கல்லுக்கும் ஈரோட்டுக்கும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளது நம் அரசு.

#### உரிமையைப் பறிக்கும் ஒன்றிய அரசு

இப்படி நம் மாநிலம் முழுவதும் ஒவ்வொரு மாவட்டத்துக்கும் பார்த்துப் பார்த்துச் செய்ததனால்தான் இன்று நம் தமிழ்நாடு இந்தியாவில் வளரும் மாநிலங்களில் சதவிகித அடிப்படையில் முதலிடத்தைப் பிடித்துள்ளது. 11.19% இரட்டை இலக்க வளர்ச்சி. இதற்கெல்லாம் ஒன்றிய பா.ஜ.க அரசு ஏதேனும் நமக்கு உதவி செய்ததா? வழிகாட்டியதா? எதுவுமே இல்லை. ஏதேனும் திட்டங்களைக் கொண்டு வந்தார்களா? இல்லை. நாம் கேட்கின்ற நிதியை வழங்கினார்களா? இல்லை. நிதி உரிமையைப் பறிக்கிறார்கள், கல்வி உரிமையைப் பறிக்கிறார்கள், மொழி உரிமையைப் பறிக்கிறார்கள். தமிழ்நாட்டிலிருந்து வசூல் செய்த வரிப்பணத்திலிருந்து எந்த நிதியும் வழங்குவது இல்லை. கல்வி நிதி வழங்க வேண்டிய 3,200 கோடி ரூபாய் வழங்க முடியாது என்று கூறிவிட்டார்கள். புதிய கல்விக் கொள்கையை ஏற்றுக்கொண்டால்தான் வழங்குவோம் என்று கூறிவிட்டார்கள்.

ஆனால், அந்தப் புதிய கல்விக் கொள்கையில் என்ன இருக்கிறது? மீண்டும் எப்படியாவது சமஸ்கிருதத்தையும் இந்தியையும் மும்மொழிக் கொள்கையாக எடுத்து வந்து தமிழ்நாட்டுக்குள் திணிக்கின்ற முயற்சி.

மெட்ரோ திட்டத்துக்கு நிதி கேட்டால், அதுவும் இல்லை. ஜி.எஸ்.டி. வரிப்பகிர்வு அதையும் வழங்குவது இல்லை. எந்தத் திட்டமும் தமிழ்நாட்டுக்கு வழங்குவது இல்லை. தமிழ்நாட்டுக்கு நல்லது செய்யவில்லை என்றாலும் பரவாயில்லை, கெடுதல் செய்யாமல் இருக்கலாம். இன்று பாசிச பா.ஜ.க–வைத் துணிச்சலாக எதிர்த்து நிற்கக்கூடிய ஒரு முதுகெலும்புள்ள முதலமைச்சர், ஒரு தலைவர் என்றால் இந்தியாவிலேயே நம் தலைவர் அவர்கள் தான் நம்பர் ஒன் முதலமைச்சர்.

#### பாசிச சக்திகளின் விளையாட்டு

இன்று நான்கு அடிமைகளைப் பிடித்து வைத்துக்கொண்டு எப்படியாவது தமிழ்நாட்டுக்குள் நுழைந்துவிடலாம் என்று 'சங்கிக் கூட்டம்' முயற்சி செய்து கொண்டிருக்கிறது. மோடியும் அமித்ஷாவும் முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நாம் உறுதியாக ஒன்று சொல்வோம். பாசிச சக்திகளின் விளையாட்டுகள், அரசியல் விளையாட்டுகள் எல்லாம் வடநாட்டில் உங்களுக்குப் பலனளிக்கும், தமிழ்நாட்டுக்குள் நிச்சயம் எடுபடாது. தி.மு.க. இளைஞர் அணி நிச்சயம் விடமாட்டோம். நம் தலைவர் அதனால்தான் தெளிவாக ஒவ்வொரு முறையும் சொல்வார்.

நடைபெறவிருக்கின்ற இந்தச் சட்டமன்றத் தேர்தல் தமிழ்நாடு அணிக்கும் டெல்லி அணிக்குமான ஒரு தேர்தல். பத்துத் தோல்வி பழனிச்சாமி, இந்த முறை படுதோல்வி பழனிச்சாமியாக ஆக்கப்போகிறது தமிழ்நாடு. இந்த முறையும் அமித்ஷாவையும் மோடி கூட்டணியையும் அடிமைக் கூட்டத்தையும் நம் தி.மு.க. அணி நிச்சயம் வென்று காட்டும்.

#### மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி

அரசியலில் முரட்டுத் தொண்டர்களைப் பார்த்திருப்பீர்கள், முரட்டுப் பக்தர்களைப் பார்த்திருப்பீர்கள். ஆனால் இன்று, இந்தியாவே ஒரு முரட்டு அடிமையை எடப்பாடி பழனிச்சாமி அவர்களின் உருவத்தில் பார்த்துக் கொண்டிருக்கிறது. இன்னொரு உதாரணம் சொல்கிறேன். எப்பொழுதுமே ஓர் அசல் தரத்திலான பொருள் வந்தால் அதற்கு மக்கள் மத்தியில் பெரிய வரவேற்பு இருக்கும். உடனே என்ன செய்வார்கள், அதேபோல ஒரு போலிப் பொருளை சந்தையில் சில பேர் உற்பத்தி செய்து இறக்குவார்கள். அதை எல்லாரும் 'அசம்பிள்டு பீஸ்' என்று சொல்வார்கள், இன்னும் சொல்லப்போனால் 'சைனா மேக்' என்பார்கள். அந்த வகையில் இன்று ஓர் 'அசம்பிள்டு பீஸ்' ஆக, சைனா மேக் மாதிரி 'டெல்லி மேக்' ஆக இன்று அ.தி.மு.க. கூட்டணி அமைந்துள்ளது. அந்தக் கூட்டணிக்கு கேரண்டியும் கிடையாது, வாரண்டியும் கிடையாது. எந்த நிமிடம் வேண்டுமானாலும் பியூசை புடுங்கிவிடலாம். எந்த நிமிடம் வேண்டுமானாலும் செயல்படாமல் போய்விடும். தேர்தல் முடிந்த உடனே நிச்சயம் செயல்படாமல் போய்விடும். ஆனால், நம் கூட்டணி அப்படி இல்லை. நம் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி அமைந்த பிறகு, சந்தித்த அனைத்துத் தேர்தல்களிலும் நாம் வெற்றி பெற்றிருக்கிறோம். தமிழ்நாட்டு மக்கள் நம் கூட்டணியின் மேல் நம்பிக்கை வைத்துள்ளார்கள். இன்று பா.ஜ.க. நேரடியாக வருவதற்குப் பதிலாக 'பி டீம்', 'சி டீம்', 'டி டீம்' வரை இறங்கிவிட்டார்கள்.

நீங்கள் எத்தனை டீம் வந்தாலும் தமிழ்நாட்டின் சாம்பியன் எங்களின் தலைவர்தான், தி.மு.க. மட்டும்தான். அதை ஏற்கனவே செய்து காட்டியிருக்கிறோம், மீண்டும் மீண்டும் செய்துகாட்டுவோம். இங்கு வந்துள்ள இளைஞர் அணி நிர்வாகிகள், உங்களிடம் நான் கேட்பதெல்லாம் முதலில் உங்களின் குடும்பத்தினர், உங்களின் பெற்றோர்கள், உடன்பிறந்த தம்பி, தங்கை, உங்களின் மனைவி ஆகியோரிடம் பேசுங்கள். உங்கள் குடும்பத்தில் உள்ள மொத்த வாக்குகளும் முழுமையாக உதயசூரியன் சின்னத்துக்குத்தான் சிதறாமல் வர வேண்டும். அதை நீங்கள் உறுதி செய்ய வேண்டும்.

#### கொள்கையற்ற கூட்டம்

நாம் தெருவெல்லாம் சென்று வாக்கு கேட்கிறோம், நம் வீட்டில் முதலில் கேட்க வேண்டும் என்பதை மறந்துவிடக் கூடாது. ``நீ எல்லா இடத்திலும் கேட்டாய், என்னிடம் கேட்கவில்லையே" என்று நம் வீட்டில் சொல்லிவிடுவார்கள். மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

உங்களின் நண்பர்கள், உறவினர்கள் ஆகியோரிடமும் உங்களின் பிரசாரத்தைக் கொண்டு செல்லுங்கள். கழக ஆட்சியில் நாம் இந்த ஐந்து ஆண்டுகள் செய்துள்ள சாதனைகளை எடுத்துச் சொல்லுங்கள். மாற்றுக் கட்சியினர்கூட உங்களுக்குத் தெரிந்தவர்கள் இருப்பார்கள். நம் வரலாறும் இயக்கத்தின் சாதனைகளும் தெரியாமல் மாற்றுக் கட்சியில் சேர்ந்திருப்பார்கள். அவர்களிடமும் நம் வரலாற்றை எடுத்துச் சொல்லுங்கள். அதேபோல, இன்று ஒரு கொள்கையற்ற கூட்டம் சுற்றிக் கொண்டிருக்கிறது. பேசக்கூடத் தெரியவில்லை, வெறும் சத்தம்தான். அவர்களிடம் பேசுங்கள்.

முந்தைய 10 ஆண்டுக்கால அ.தி.மு.க. ஆட்சியில் தமிழ்நாடு எப்படி இருந்தது, அதை எப்படி இந்த 5 ஆண்டுகளில் நம் தலைவர் சரி செய்துள்ளார் என்பதைத் தரவுகளோடும், உண்மையான ஆதாரத்தோடும் எடுத்துப் பேசுங்கள். தமிழ்நாடு அடைந்துள்ள முன்னேற்றத்தைப் புள்ளிவிவரத்தோடு எடுத்துச் சொல்லுங்கள்.

வட்ட, கிளை, பகுதி இளைஞர் அணி நிர்வாகிகள், வாக்குச்சாவடியில் இருக்கின்ற ஒவ்வொரு வீட்டுக்கும் குறைந்தது இரண்டு முறையாவது நீங்கள் சென்று வாக்கு கேட்டிருக்க வேண்டும். அந்தப் பகுதியில் இருக்கின்ற 18 வயதிலிருந்து 35 வயதுக்குள் இருப்பவர்கள் அனைவரும் நம் இலக்கு. அதை அடைந்தே ஆக வேண்டும். எப்படி நான் உங்களைப் பல முறை சந்திக்கிறேனோ, அதேபோல நீங்கள் ஒவ்வொருவரும் வட்டம் மற்றும் வாக்குச்சாவடி அளவில் இருக்கின்ற இளைஞர் அணி நிர்வாகிகளை, பொறுப்பாளர்களைச் சந்தித்து உற்சாகப்படுத்துங்கள். உங்களில் பலர் பி.எல்.ஏ–2, பி.எல்.சி போன்ற பொறுப்புகளில் இருப்பீர்கள். அந்தப் பொறுப்புகளை மிகக் கவனமாக நீங்கள் கவனம் செலுத்திச் செய்ய வேண்டும்.

உங்கள் வாக்குச்சாவடியில், உங்கள் தொகுதியில் இளைஞர் அணி நிர்வாகிகளின் பணி தனித்துத் தெரிய வேண்டும். களத்தில் மட்டுமல்ல, முடிவுகளிலும் நிச்சயம் தனித்துத் தெரிய வேண்டும்.

தொடர்ச்சி 9 ஆம் பக்கம்